இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

புதன்கிழமை 21-05-2025

# அரசமைப்புச் சட்டமே உயர்ந்தது!

உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக பூஷன் ராமகிருஷ்ணா கவாய் பொறுப்பேற்றுள்ளார். குடியரசுக் கட்சியின் தலைவராக இருந்த ஆர்.எஸ்.கவாய் அவர்களின் மகன் இவர்.

புதிய தலைமை நீதிபதியான பூஷன் கவாய் ஆற்றி இருக்கும் உரை, மிகுந்த நம்பிக்கை அளிப்பதாக அமைந்திருக்கிறது.

**“நீதித்துறையா, நிர்வாகத்துறையா, நாடாளுமன்றமா? யார் உயர்ந்தவர்கள் என்ற கேள்வி எழுந்து வருகிறது. இந்திய அரசமைப்புச் சட்டம் மட்டுமே உயர்ந்தது. மற்றவை அனைத்தும் அரசமைப்புச் சட்டத்துக்காகப் பணியாற்ற வேண்டும்.**

**ஜனநாயக நாட்டில் நாடாளுமன்றம், நிர்வாகத்துறை, நீதித்துறை ஆகியவை அரசமைப்புச் சட்டக் கட்டுப்பாட்டுக்குள் செயல்படுகிறது. நம் அரசமைப்பு, அனைவரையும் விட உயர்ந்தது. இந்த அரசமைப்புச் சட்டம் தான் இந்த மூன்று தூண்களுக்கும் அதிகார வரம்புகளையும், கட்டுப்பாடுகளையும் விதிக்கிறது. மறு ஆய்வு அதிகாரம் அரசமைப்புச் சட்டத்தால்தான் நீதித்துறைக்கு வழங்கப் பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட நீதித்துறையும் மறு ஆய்வுக்கு உட்பட்டதுதான். இதுதான் அரசமைப்புச் சட்டத்தின் அதிகாரம்”** என்று கூறி இருக்கிறார் தலைமை நீதிபதி பூஷன் கவாய் அவர்கள்.

அரசமைப்புச் சட்டத்தை விட இந்த நாட்டில் ஆளுநரும், குடியரசுத் தலைவரும், ஒன்றியத்தை ஆளும் பா.ஜ.க. அரசும் தங்களை மிகப்பெரிய அதிகாரம் படைத்த சக்திகளாகக் காட்டிக் கொள்ளும் இந்தக் காலத்தில் உச்ச நீதிமன்ற நீதிபதியின் இந்த உரை மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ்நாடு சட்டமன்றத்தால் நிறைவேற்றி அனுப்பி வைக்கப்படும் சட்டமுன்வடிவுகளுக்கு ஒப்புதல் தராமல் நியமனப் பதவியில் இருக்கும் ஆளுநர் இழுத்தடிக்கிறார்.’ நான் ஒப்புதல் வழங்காவிட்டாலே நிராகரித்ததாகத் தான் அர்த்தம்’ என்று கொக்கரிக்கிறார். அவரை ஒப்புதல் அளிக்கச் சொல்லுங்கள் என்று ஒன்றிய அரசிடம் சொன்னாலும் அவர்களும் அதனைத் தட்டிக் கேட்கவில்லை. உச்சநீதிமன்றம் போனது தமிழ்நாடு அரசு. ஆளுநரை உச்சந்தலையில் கொட்டியது உச்சநீதிமன்றம். அரசமைப்புச் சட்டம் தனக்கு வழங்கியுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி சட்டமுன் வடிவுகளுக்கு ஒப்புதல் வழங்கியது உச்சநீதிமன்றம். அரசமைப்புச் சட்டம் தனக்கு வழங்கியுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி, சட்டமுன் வடிவுகளுக்கு ஒப்புதல் வழங்க காலக்கெடு விதித்தது உச்சநீதிமன்றம்.

உடனே கொந்தளிக்கிறார் துணை குடியரசுத் தலைவர் தன்கர். ‘உங்களுக்கு யார் இந்த அதிகாரத்தைக் கொடுத்தது?’ என்று உச்சநீதிமன்றத்தையே கேட்கிறார் தன்கர். அரசமைப்புச் சட்ட அதிகாரத்தைத்தான் உச்ச நீதிமன்றம் பயன்படுத்தியது. இதுகூட துணை குடியரசுத் தலைவருக்குத் தெரியவில்லை.

‘இப்படி காலக்கெடு வைப்பதற்கு உரிமை இருக்கிறதா?’ என்று ஏதும் தெரியாதவரைப் போல உச்சநீதி மன்றத்தையே விளக்கம் கேட்கிறார் குடியரசுத் தலைவர் முர்மு. எந்த அடிப்படையில் தீர்ப்பளித்தோம் என்று அந்த தீர்ப்பிலேயே இருக்கிறது. அதைக்கூட முழுமையாகப் படிக்கவில்லை.

இந்த அடிப்படையில் பார்த்தால் அரசமைப்புச் சட்ட அதிகாரத்தைத் தான் தமிழ்நாடு அரசும் பயன்படுத்துகிறது. அதனை ஆளுநர் அவமதித்துக் கொண்டு இருக்கிறார். அரசமைப்புச் சட்டப்படி தீர்ப்பு தரும் உச்சநீதி மன்றத்தை குடியரசுத் தலைவரும், துணைக் குடியரசுத் தலைவரும் அவமதித்துக் கொண்டு இருக்கிறார்கள். இந்த நிலையில், உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி மிகச் சரியான விளக்கத்தைத் தந்துள்ளார். **‘அரசமைப்புச் சட்டமே உயர்ந்தது’** என்று!

இந்திய அரசமைப்புச் சட்டத்தைக் காக்க வேண்டிய முதல் கடமை உச்ச நீதிமன்றத்துக்குத்தான் இருக்கிறது. இந்தியா என்பது இறையாண்மையுள்ள, சமதர்ம, சமயச்சார்பற்ற மக்களாட்சி குடியரசு ஆகும். இவைதான் இந்தியாவைக் காப்பாற்றி வருகிறது. உலகின் மிகப்பெரிய அரசமைப்புச் சட்டத்தைக் கொண்டது இந்தியா. 395 உறுப்புகளைக் கொண்டது. 22 பகுதிகள், 12 அட்டவணைகளைக் கொண்டது.

**“இந்திய மக்களாகிய நாம் இந்தியாவை ஓர் இறையாண்மையுள்ள (sovereign), சமதர்ம (Socialist), சமயச்சார்பற்ற (secular), மக்களாட்சி குடியரசாக (Democratic Republic) உருவாக்க உறுதி ஏற்கிறோம்.**

**இந்திய குடிமக்கள் அனைவருக்கும் சமுதாய, பொருளாதார, அரசியல் நீதியும், எண்ணம், கருத்து வெளியீடு, நம்பிக்கை, மதப்பற்று, மதவழிபாடு ஆகியவற்றில் சுதந்திரமும், தகுதி மற்றும் வாய்ப்பில் சமத்துவம் கிடைக்கவும் மக்களிடையே தனிமனித மாண்பையும் நாட்டின் ஒற்றுமையை வளர்க்கவும் நமது அரசியல் நிர்ணயச்சபையில் உறுதி கொண்டு 1949 நவம்பர் 26 ஆம் நாளான இன்று நமக்கு நாமே இந்த அரசியலமைப்பை நிறைவேற்றி அளித்து நடைமுறைப்படுத்துகிறோம்” என்று சொல்கிறது இந்திய அரசமைப்பின் முகவுரை.**

கேசவ பாரதி (1973) வழக்கில், ‘ முகவுரை அரசமைப்பின் ஒரு பகுதி’ எனத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. இந்தியாவைக் காப்பாற்றிக் கொண்டிருப்பதே இந்த அரசமைப்புச் சட்டம் தான். இந்தச் சட்டத்துக்கு பல்வேறு வகைகளில் ஆபத்து சூழ்ந்துள்ள காலம் இது.

‘அரசமைப்புச் சட்டம்தான் எனக்கு வேதம்’ என்று சொன்னவர் பிரதமர் மோடி. ஆனால் அவர் நடைமுறையில் அப்படி நடந்து கொள்ளவில்லை. இம்முறை 300 இடங் களை பா.ஜ.க. மட்டும் பிடித்து தனிப்பெரும் கட்சியாக ஆட்சி அமைத்திருந்தால், இன்று நாம் பார்க்கும் காட்சிகளே வேறாக இருந்திருக்கும். 400 இடங்களைப் பிடித்திருந்தால் நாசம் செய்திருப்பார்கள். 240 என்பதால்தான் முழிபிதுங்கிக் கிடக்கிறார்கள். ஆனாலும் தன்கர்கள் மூலமாக தங்களது விஷமங்களை விதைத்து வருகிறார்கள்.

**இத்தகைய சூழலில் உச்சநீதிமன்றத்துக்கு மாபெரும் பொறுப்பு இருக்கிறது. அத்தகைய பொறுப்பை மிகச் சரியாக வெளிப்படுத்தி இருக்கிறார் தலைமை நீதிபதி பூஷன் கவாய்.**

## அனைத்து இலவச மின்சாரச் சலுகைகளும் தொடரும்!

# வீட்டு மின் இணைப்புகளுக்கு எவ்வித மின் கட்டண உயர்வும் இல்லை!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் தகவல்!



சென்னை, மே 21-

வீட்டு மின் இணைப்புகளுக்கு எவ்வித மின் கட்டண உயர்வும் இல்லை. அனைத்து இலவச மின்சாரச் சலுகைகளும் தொடரும் என போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அமைச்சர் சா.சி.சிவசங்கர் தெரிவித்துள்ளதாவது:-

கடந்த சில நாட்களாக செய்தி ஊடகங்களில் மின் கட்டண உயர்வு குறித்து அதிகாரபூர்வ மற்ற தகவல்கள் வெளிவந்த வண்ணம் உள்ளது.

இது குறித்து பின்வருமாறு தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

தற்சமயம் மின் கட்டண உயர்வு குறித்து எவ்வித ஆணையும், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தினால் வெளியிடப்படவில்லை.

எனினும் ஒழுங்குமுறை ஆணையம், மின்கட்டணம் தொடர்பான ஆணை வழங்கிடும் போது, அதனை நடைமுறைப் படுத்துகையில் வீட்டு மின் நுகர்வோர்களுக்கு எவ்வித மின் கட்டண உயர்வும் இருக்கக் கூடாது எனவும், தற்போது வழங்கப்படும் அனைத்து இலவச மின்சாரச் சலுகைகளும் தொடர வேண்டும் எனவும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள் என்று போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

## மசோதாக்கள் மீது ஆளுநர், குடியரசுத் தலைவர் முடிவெடுக்க கெடு விதித்தது சரியானதே!

# உச்சநீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து உயர்நீதிமன்றம் விசாரணை நடத்தத் துடிப்பதன் பின்னணி என்ன?

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி கேள்வி!



**சென்னை, மே 21 –**

**மசோதாக்கள் மீது ஆளுநர், குடியரசுத் தலைவர் முடிவெடுக்க உச்சநீதிமன்றம் கெடு விதித்தது அரசமைப்புச் சட்டம் 142–இன் படி மிகச் சரியானதே என்றும், புதிய சட்டம் செய்யவில்லை – இருப்பதைப் பயன்படுத்தி வழங்கப்பட்ட தீர்ப்பு இது என்றும் இந்தத் தீர்ப்பை முறியடிக்கும் வகையில் ஒன்றிய அரசு முயற்சிக்கலாமா? என்றும், உச்சநீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து உயர்நீதிமன்ற அமர்வு விசாரணை நடத்த துடிப்பதன் பின்னணி என்ன? என்றும் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.**

*இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-*

*குடியரசுத் தலைவரோ, ஆளுநரோ அரசமைப்புச் சட்டத்திற்கு அப்பாற்பட்டவர்களோ, மேலானவர்களோ அல்ல! இதுபோன்ற ஒரு செயல், சென்னை உயர்நீதிமன்றத்தில் விடுமுறைக் காலத்தில் அமைந்துள்ள நான்கு அமர்வுகளில் ஓர் அமர்வில் ஜஸ்டில் ஜி.ஆர்.சாமிநாதன், ஸ்டிஸ் லட்சுமி நாராயணன் அமர்வு அந்தக் குறிப்பிட்ட அமர்வு - துணை வேந்தர்கள் நியமன உரிமை தமிழ்நாடு அரசுக்கு வழங்கும் சட்டத்தை உறுதி செய்து அரசமைப்புச் சட்டம் 142இன்படி உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பினால் நடைமுறைப்படுத்தப்பட்ட முக்கிய சட்டத்தை எதிர்த்து ஒரு வழக்கு பட்டியலிடப்பட்டு, அதை அவசர வழக்காக விடுமுறை காலத்தின் அமர்வு ஜஸ்டிஸ் ஜி.ஆர்.சாமிநாதன் தலைமையில் எடுத்து விசாரிப்பதுடன், தமிழ்நாடு அரசு ஒரு வாரத்திற்குள் பதில் மனு (Counter) போட வேண்டும் என்று நிர்ப்பந்திப்பது போல கூறுவது எந்த நோக்கத்தோடு என்ற கேள்வி எழத்தானே செய்கிறது?*

**நீதிமன்ற விடுமுறை காலத்தில் வழக்கு!**

*இந்த வழக்கை இந்த அமர்வு விரைவுபடுத்த அதற்கென்ன அவசியம்? அதுவும் நீதிமன்ற விடுமுறை காலத்தில்! உச்சநீதிமன்றத் தீர்ப்பை, உயர்நீதிமன்ற அமர்வு தவறு என்று சட்டப்படி கூற முடியுமா?*

*இரண்டு வாரத்திற்குள் ஏதாவது தடையாணை போன்று வழங்கலாமா என்று கருதும் திட்டமோ என்ற நியாயமான சந்தேகம் எழவே செய்கிறது!*

*உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து உயர்நீதிமன்ற அமர்வு அதுவும் விடுமுறைக் கால அமர்வு இப்படி விசாரித்து, ஏதாவது அவசர ஆணை பிறப்பிக்கத் துடிப்பது சட்டப்படி செல்லுமா? என்பதும் கேள்விக் குறி.*

*குடியரசுத் தலைவர் உச்சநீதிமன்றத்திடம் ஆலோசனைகேட்டு 14 கேள்விகளை முன்வைத்துள்ள நிலையில், அதே பிரச்சினையை பயன்படுத்தி உள்ள ஒரு வழக்கின் விசாரணைக்கு இப்போது உயர்நீதிமன்றம் மிகுந்த அவசரம் காட்டுவது, சட்டப்படியும். நியாயப் படியும் உகந்ததா?*

**பூனைக்குட்டி வெளியே வரும்!**

*தமது உயர்நீதிமன்றத் தீர்ப்புகள்பற்றி பொது வெளியில் விமர்சிக்கப் பட்ட ஒருவர், இப்படி விசாரணைக்கு நிர்ப்பந்தப் படுத்தி, “ஒரு வாரத்திற்குள்” என்று தமிழ்நாடு அரசுக்கு கெடு வைத்ததன் நோக்கம் என்ன?*

*இவற்றையெல்லாம் மக்கள் மன்றத்தில், நடுநிலையாளர்களும், ஜனநாயக, அரச மைப்புச் சட்டப் பாதுகாவலர்களும் கூர்ந்து கவனித்தே வருகின்றனர். விரைவில் ‘பூனைக்குட்டி’ மெல்ல மெல்ல வெளியே வரும் என்பது உறுதி!*

*இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*

## ஆப்பிள் ஐ போன் உற்பத்தி நிறுவனமான ஃபாக்ஸ்கான் நிறுவனம்

# தமிழ்நாட்டில் கூடுதலாக ரூ.12,800 கோடி முதலீடு!

## ஆப்பிள் ஐ போன் உற்பத்தியை அதிகரிக்கத் திட்டம்!

*சென்னை, மே 21 -*

*ஆப்பிள் ஐ போன் உற்பத்தி நிறுவனமான ஃபாக்ஸ்கான் நிறுவனம், தமிழ்நாட்டில் கூடுதலாக 12 ஆயிரத்து 800 கோடி ரூபாயை முதலீடு செய்துள்ளதாக அறிவித்துள்ளது.*

*தமிழ்நாட்டில், ஆப்பிள் நிறுவனத்திற்காக, ஃபாக்ஸ்கான் நிறுவனம் சென்னையை அடுத்துள்ள திரும்பெரு ம்புதூரில் உள்ள தொழிற்சாலையில், ஐபோன்களை தயாரித்து வருகிறது.*

*இந்நிலையில், தமிழ்நாட்டில் ஐபோன் உற்பத்தி அதிகரித்துள்ளதால், நடப்பு 2025ம் ஆண்டில், ஃபாக்ஸ்கான் நிறுவனத்தின் லாபம் இருமடங்காக அதிகரித்து, 1.7 லட்சம் கோடி ரூபாயை வருவாய் ஈட்டியுள்ளது. இந்நிலையில், ஐபோன் உற்பத்தியை மேலும் அதிகரிக்க, ஃபாக்ஸ்கான் நிறுவனம் கூடுதலாக தமிழ்நாட்டில் 12 ஆயிரத்து 800 கோடி ரூபாயை முதலீடு செய்துள்ளது. சிங்கப்பூர் கிளை நிறுவனத்தின் மூலம் கடந்த 5 நாட்களில், இந்த முதலீடு செய்யப்பட்டுள்ளது.*

*முன்னதாக, இந்தியாவில் உற்பத்தி செய்யப்பட்ட ஐபோன்களே, அமெரிக்காவில் அதிகம் விற்பனை செய்யப்பட்டதாக, ஆப்பிள் நிறுவன சிஇஓ டிக் குக் அண்மையில் தெரிவித்திருந்தார்.*

*இந்நிலையில், அமெரிக்காவுக்கு சப்ளை செய்யப்படும் ஐ போன்களின் உற்பத்தி சீனாவில் இருந்து இந்தியாவுக்கு மாற்றவும் ஆப்பிள் நிறுவனம் திட்டமிட்டுள்ளது.*

*சர்வதேச அளவில் ஐபோன் உற்பத்தி செய்யப்படும் ஐபோன்களில், 15 சதவீதம் இந்தியாவில் உற்பத்தி செய்யப்படுகின்றன.*

*இந்தியாவில், இந்த நிதியாண்டில் 6 கோடி ஐபோன்களை உற்பத்தி செய்ய, ஆப்பிள் நிறுவனம் திட்டமிட்டுள்ளது.*

## ஆதிதிராவிடர் - பழங்குடியினர் - கிறித்துவ ஆதிதிராவிடர்

# மாணாக்கருக்கு கல்வி உதவித்தொகை!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

*சென்னை, மே 21 -*

*ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறித்துவ ஆதிதிராவிடர் மாணாக்கருக்காக செயல்படுத்தப்படும் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை திட்டம் மற்றும் பிற கல்வி உதவித்தொகை திட்டங்களின் கீழ் 2024-2025-ஆம் கல்வியாண்டில் மாணாக்கர்களிடமிருந்து விண்ணப்பங்கள் இணைய வழியில் பெறப்பட்டு ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்ட வங்கி கணக்கில் கல்வி உதவித்தொகை வரவுவைக்கப் பட்டு வருகின்றன.*

*தற்போது 2024 - 2025 -ஆம் கல்வியாண்டிற்கு கல்வி உதவித்தொகைக்கு விண்ணப்பிக்க கடைசி நாள் 30.05.2025 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.*

*எனவே கல்வி உதவித் தொகை விண்ணப்பிக்காத ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறித்துவ ஆதிதிராவிடர் இன மாணாக்கர்கள் UMIS (University Management Information System) என்ற இணையதளத்தில் (https://umis.tn.gov.in/) உடனடியாக விண்ணப்பித்து பயன்பெறுமாறுகேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.*

*மேலும் கல்லூரி நிர்வாகங்கள் மாணாக்கருக்கு கல்வி உதவித்தொகை விண்ணப்பிக்க உதவிடுமாறும் கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள் என்று தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் குறிப் பிடப்பட்டுள்ளது.*



கோவில்பட்டி ஊராட்சி ஒன்றியம் கிளவிப்பட்டி ஊராட்சியில் நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்களின் நாடாளுமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டப்பட உள்ள சமுதாய நலக்கூடத்திற்கு அடிக்கல் நாட்டினார். உடன் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பெ.கீதாஜீவன், மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, நகர் மன்றத் தலைவர் கருணாநிதி, ஒன்றியச் செயலாளர்கள் முருகேசன், கி.ராதாகிருஷ்ணன், பொதுக் குழு உறுப்பினர் இரா.ரமேஷ், இளைஞரணி துணை அமைப்பாளர் வி.பி.ஜெயபால், நகர் மன்ற உறுப்பினர் தவமணி, நகர மாணவரணி துணை அமைப்பாளர் மயில்கர்ணன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



சென்னை தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (19.05.2025) அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தலைமையில், குறுவை பருவத்திற்கான முன்னேற்பாடுகள் மற்றும் விதை கையிருப்பு, தேவை குறித்து மாவட்ட அளவிலான அலுவலர்களுடன் காணொலி வாயிலாக ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர் வ.தட்சிணாமூர்த்தி, வேளாண்மை துறை இயக்குநர் பி.முருகேஷ், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் பி.குமரவேல்பாண்டியன், தலைமைப் பொறியாளர் (வே.பொ) (ரூ.ப.தி.) சந்திரசேகர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சாம்சங் இந்தியா தொழிலாளர்கள் சங்கத்தால் எழுப்பப்பட்ட ஊதிய உயர்வு உள்ளிட்ட கோரிக்கைகள் தொடர்பாக தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ.கணேசன் முன்னிலையில் பேச்சுவார்த்தை நடைபெற்றது. இப்பேச்சுவார்த்தையில் நிர்வாகத்தினர் மற்றும் சி.ஐ.டி.யு. தொழிற்சங்கத்தினர் கலந்து கொண்டனர்.

## சமத்துவத்தை வலியுறுத்திய

# அயோத்திதாசப் பண்டிதரின் கருத்துக்கள் வலுக்கட்டும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிவு!

சென்னை, மே 21 -

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அயோத்திதாசப் பண்டிதரின் பிறந்த நாளையொட்டி, தமது சமூக வலைதளப் பக்கத்தில், அவரது கருத்துக்கள் வலுக்கட்டும், ஆதிக்கம் அழியட்டும் என்று பதிவிட்டுள்ளார்.



அயோத்திதாசப் பண்டிதர் அவர்களின் பிறந்தநாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:

**மே 20: பண்டிதர் அயோத்திதாசர் பிறந்தநாள்: சென்னையில் திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம்,**

**ஆதிதிராவிட மக்களுக்காக 1000 கோடி ரூபாயில் நாம் செயல்படுத்தி வரும் குடியிருப்புகள் மேம்பாட்டுத் திட்டத்துக்குப் பண்டிதரின் பெயர் எனத் 'திராவிடப் பேரொளி' அயோத்திதாசரைப் போற்றி வருகிறது நமது திராவிட மாடல் அரசு!**

**சமத்துவத்தை வலியுறுத்திய அவரது கருத்துகள் வலுக்கட்டும்! ஆதிக்கம் அழியட்டும்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

## நேரடி சம்பள உயர்வு – சிறப்பு ஊதிய உயர்வு – சிறப்பு பதவி உயர்வு!

# 'சாம்சங்' தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு - பேச்சுவார்த்தையில் சுமூகமான முடிவு!

## தொழிலாளர் நலத்துறை அமைச்சர் சி.வெ.கணேசன் முன்னிலையில் உடன்பாடு!

**சென்னை, மே 21 -**

**சாம்சங் இந்தியா தொழிலாளர்கள் சங்கத்தால் எழுப்பப்பட்ட ஊதிய உயர்வு உள்ளிட்ட கோரிக்கைகள் தொடர்பாக தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ.கணேசன் முன்னிலையில் பேச்சுவார்த்தை நடைபெற்றது.**

இப்பேச்சுவார்த்தையில் நிர்வாகத்தினர் மற்றும் சி.ஐ.டி.யு. தொழிற்சங்கத்தினர் கலந்து கொண்டனர்.

இப்பேச்சுவார்த்தையின் முடிவில் சுமூகமான முடிவு ஏற்பட்டது. இருதரப்பும் ஏற்றுக்கொண்டவாறு பின்வரும் முடிவுகள் எடுக்கப்பட்டது.

தொழிலாளர்களுக்கு 2025-2026 ஆம் ஆண்டில் ரூ.9000/- 2026-2027 மற்றும் 2027-2028 ஆண்டுகளுக்கு தலா ரூ.4500/- வீதம் மூன்றாண்டு காலத்திற்கு ரூ.18000/- நேரடி சம்பள உயர்வு தொழிலாளர்களுக்குக் கிடைக்கும்.

அனுபவத்தின் அடிப்படையிலான சிறப்பு ஊதிய உயர்வு மூன்றாண்டு காலங்களில் ரூ.1000/- முதல் ரூ.4000/- வரை தொழிலாளர்களுக்கு கிடைக்கும்.

ஒருமுறை சிறப்பு பதவி உயர்வாக 31.03.2025 தேதியில் 6 வருடங்கள் முறையான பணி நிறைவு செய்து பதவி உயர்வு கிடைக்காத தொழிலாளர்களுக்கு (ஆப்ரேட்டர் 1/2/3, டெக்னிசியன் 1/2/3) சிறப்பு பதவி உயர்வு அளிக்கப்படும்.

கூடுதல் விடுப்பு சலுகைகள், நீண்ட காலம் பணியாற்றிய தொழிலாளர்களுக்கு பணி விருது, குளிரூட்டப்பட்ட பேருந்து வசதி உள்ளிட்ட வசதிகள் தொழிலாளர்களுக்குக் கிடைக்கும்.

## வேலை வாய்ப்புக்கான தொழிலாளர் மேலாண்மையில்

# பட்ட - பட்ட மேற்படிப்பு மற்றும் முதுநிலை பட்டயப் படிப்புகளில் சேர விண்ணப்பங்கள்!

## தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலைய இயக்குநர் அறிவிப்பு!

சென்னை, மே 21 -

தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையத்தில் 2025--2026ம் ஆண்டிற்கான பி.ஏ. (தொழிலாளர் மேலாண்மை) பட்ட படிப்பு, எம்.ஏ. (தொழிலாளர் மேலாண்மை) பட்ட மேற்படிப்பு மற்றும் பிஜி. டி.எல்.ஏ (தொழிலாளர் நிர்வாகத்தில் முதுநிலை மாலை நேர பட்டயப்படிப்பு), தொழிலாளர் சட்டங்களும் நிர்வாகவியல் சட்டமும் (வாரஇறுதி) பட்டய படிப்புகளும் நடத்தப்பட்டுவருகின்றன. பி.ஏ. (தொழிலாளர் மேலாண்மை), எம்.ஏ. (தொழிலாளர் மேலாண்மை) படிப்புகள் சென்னை பல்கலைக் கழகத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. பிஜி. டி.எல்.ஏ. மற்றும் டி.எல். எல் (ஏ.எல்.) படிப்புகள் தமிழக அரசின் அங்கீகாரத்துடன் நடைபெற்று வருகின்றது.

பி.ஏ. (தொழிலாளர் மேலாண்மை, எம்.ஏ (தொழிலாளர் மேலாண்மை), பிஜி.டி. எல்.ஏ. மற்றும் டி.எல்.எல் (ஏ.எல்.) ஆகியபட்ட / பட்டமேற்படிப்பு / பட்டய படிப்புகள் இக்கல்வி நிலையத்தால் நடத்தப்பட்டு வருகின்றது. இக்கல்வி நிலையத்தில் பயின்ற மாணவர்கள் பல்வேறு தொழிற்சாலைகளில் மனிதவள மேம்பாட்டு மேலாளராக பணிபுரிந்து வருகின்றார்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

+2 முடித்த விருப்பமுள்ள மாணவர்கள் பி.ஏ. (தொழிலாளர் மேலாண்மை), இளநிலை பட்டம் பெற்ற மாணவர்கள் எம்.ஏ. (தொழிலாளர் மேலாண்மை) முதுநிலை பட்ட மற்றும் பட்டய படிப்புகளுக்கும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பிப்பவர்கள் மதிப்பெண் அடிப்படையில் அரசு விதிகளின்படி தேர்ந்தெடுக்கப்படுவார்கள். தங்கும் விடுதி வசதி இளநிலை மற்றும் முதுநிலை பயிலும் ஆண் மாணவர்களுக்கு மட்டும்.

விண்ணப்பங்கள் 21.04.2025 அன்று முதல் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் எம்.ஏ. (தொழிலாளர் மேலாண்மை) பட்ட மேற்படிப்பு, பிஜி. டி.எல்.ஏ. மற்றும் டி.எல். எல் (ஏ.எல்.) ஆகிய பட்ட, பட்டய படிப்புகளுக்கான விண்ணப்பங்கள் வழங்க இறுதி தேதி சென்னை பல்கலைக்கழக இளநிலை பட்ட படிப்பு தேர்வு முடிவுகள் வெளியாகும் வரை.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் - 21.05.2025

விண்ணப்ப கட்டணம் - ரூ.200/-.

For SC/ST - ரூ.100/-

(சாதிச் சான்றிதழ் நகல் தாக்கல் செய்ய வேண்டும்)



சிவகங்கை அரசு மகளிர் கலைக்கல்லூரியில் புதிய வகுப்பறை கட்டிடங்கள் திட்ட பணிகளை துவக்கி வைத்து கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் சிறப்புரை ஆற்றினார். மேடையில் மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷா அஜித் , திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ. கல்லூரி கல்வி இணை இயக்குனர் குணசேகரன் , சிவகங்கை நகர் மன்ற தலைவர் சி.எம்.துரை.ஆனந்த், திருப்புவனம் பேரூராட்சி மன்ற தலைவர் த.சேங்கைமாறன், கல்லூரி முதல்வர் முனைவர் ஜோ.நளதம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## அரசுப் பள்ளியில்

# ஒருங்குறிக் குறியீடு மூலமாக மாணவர் சேர்க்கை:

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பாராட்டு!

சென்னை,மே 21 -

மற்ற மாநிலங்களை ஒப்பிடுகையில் கல்வித் துறையில் சிறந்து விளங்கும் தமிழ்நாடு அரசு, அரசுப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கையை ஊக்குவிக்க பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.




இந்நிலையில் காஞ்சிபுரம் ஒன்றியம் திருப்புட்குழி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் க்யூஆர் கோடு மூலமாக மாணவர் சேர்க்கை நடைபெறுகிறது. அரசுப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கையை ஊக்குவிக்கும்பொருட்டு நவீன முறையில் இந்த க்யூஆர் கோடு மாணவர் சேர்க்கை நடைபெற்று வருகிறது.

இதுதொடர்பாக பள்ளியின் சார்பில் வைக்கப்பட்டுள்ள பேனரில்,

"மாணவர் சேர்க்கை விண்ணப்பம்

வீட்டில் இருந்தே உங்கள் குழந்தைகளை நம்ம திருப்புட்குழி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் சேர்த்திடுங்க..

அதற்கு க்யூ ஆர் கோடு ஸ்கேன் பண்ணுங்க; நம்ம ஸ்கூல்ல சேருங்க" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழக பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் தனது எக்ஸ் பக்கத்தில் இந்த பேனரைப் பகிர்ந்து 'சூப்பர்' எனப் பாராட்டியுள்ளார்.

## பயணிகளின் இன்னல் தீர்க்க,

# சென்னை கோட்டை ரயில்நிலையத்தில் விரைந்து எஸ்கலேட்டர்கள் மற்றும் லிஃப்ட்கள் நிறுவுக!

## தயாநிதி மாறன் எம்.பி. தெற்கு ரயில்வே பொது மேலாளருக்கு கடிதம்!

சென்னை, மே 21 -

சென்னை கோட்டை ரயில் நிலையம், தினசரி ஆயிரக்கணக்கான பயணிகளுக்கு, குறிப்பாக முதியவர்கள், மாற்றுத்திறனாளிகள், அரசு ஊழியர்கள், ஓய்வு பெற்ற ராணுவ வீரர்கள் மற்றும் பொதுமக்களுக்கு முதன்மை போக்குவரத்துமையமாகவிளங்குகிறது. இந்நிலையத்தில் எஸ்கலேட்டர்கள் மற்றும் லிஃப்ட்கள் இல்லாமல் பயணிகள் சிரமத்திற்கு உள்ளாவது நீண்ட காலமாக கவலைக்குரிய பிரச்சினையாக உள்ளது. இதற்குத் தீர்வு காணும் வகையில், கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், தெற்கு ரயில்வே பொது மேலாளருக்கு கடிதம் எழுதி, உடனடி நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியுள்ளார்.



அதன் விவரங்கள் வருமாறு :

சென்னையின் பல ரயில் நிலையங்களில் எஸ்கலேட்டர்கள் மற்றும் லிஃப்ட்கள் இல்லாதது, மற்றும் சில நிலையங்களில் உள்ளவை பராமரிப்பின் மோசமான நிலையில் இருப்பது குறித்து, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் பலமுறை அதிகாரப்பூர்வ கடிதங்கள் மூலமும், சென்னை பிரிவு நாடாளுமன்ற உறுப்பினர்களுடனான தெற்கு ரயில்வே கூட்டங்களிலும் தொடர்ந்து எழுப்பி வருகிறார்.

மிக முக்கியமான நிலையங்களில் ஒன்றாக இருந்தும், சென்னை கோட்டை ரயில் நிலையம் பயணிகளுக்கான தினசரி வசதிகளில் அடிப்படையில் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளது. இந்த நிலையத்தை ஆயிரக்கணக்கான தினசரி பயணிகளுக்கு, குறிப்பாக முதியவர்கள், மாற்றுத்திறனாளிகள், அரசு ஊழியர்கள், ஓய்வு பெற்ற ராணுவ வீரர்கள் மற்றும் பொதுமக்கள் பயன்படுத்தி வருகிறார்கள். எழும்பூர் மற்றும் கடற்கரை இடையே நான்காவது தண்டவாளம் அமைக்கப்பட்டபோது தமிழ்நாடு தலைமைச் செயலக சங்கத்தின் எழுத்துப்பூர்வ கோரிக்கை உட்பட பலமுறை கோரிக்கைகள் வைக்கப்பட்ட பின்னரும், கோட்டை ரயில் நிலையத்தில் எஸ்கலேட்டர்கள் மற்றும் லிஃப்ட்கள் நிறுவப்பட வில்லை என்பது அதிர்ச்சியும், ஏமாற்றமும் அளிக்கிறது.

சென்னை கோட்டை ரயில் நிலையம் பின்வருவோருக்கு முதன்மையான போக்குவரத்து மையமாக உள்ளது.

தமிழ்நாடு தலைமைச் செயலகம், சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் இந்திய ரிசர்வ் வங்கி ஊழியர்கள் தலைமைச்செயலக ராணுவ கேன்டீனுக்கு அடிக்கடி வரும் ஓய்வு பெற்ற ராணுவ வீரர்கள் பாரிமுனை செல்லும் கடைக்காரர்கள் மற்றும் தினக்கூலி தொழிலாளர்கள்.

முதலமைச்சரின் சிறப்பு பிரிவுக்கு மனு சமர்ப்பிக்க வரும் பொதுமக்கள்.

இத்தகைய முக்கியமான போக்குவரத்து மையத்தில் அடிப்படை அணுகல் வசதிகள் இல்லாதது ஏற்க முடியாதது. எஸ்கலேட்டர்கள் மற்றும் லிஃப்ட்கள் இல்லாதது வெறும் அசௌகரியம் மட்டுமல்ல, இது முதியவர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளின் பாதுகாப்பான பயணத்திற்கு தடையாக உள்ளது. இந்த விஷயத்தில் உரிய நடவடிக்கை எடுக்குமாறு நான் உங்களை வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறேன் மற்றும் பின்வருவனவற்றை கோருகிறேன்.

சென்னை கோட்டை நிலையத்தின் அனைத்து நடை மேடைகளிலும் எஸ்கலேட்டர்கள் மற்றும் லிஃப்ட்கள் அனுமதித்து, நிறுவுதலை விரைவுபடுத்த வேண்டும்.

குறிப்பிட்ட காலக்கெடு மற்றும் தெளிவாக வரையறுக்கப்பட்ட திட்டமிட்ட செயல் திட்டத்தை வழங்க வேண்டும்.

தொடர்புடைய அனுமதிகளை விரைவாகப் பெற தமிழ்நாடு அரசு அமைப்புகளுடன் ஒருங்கிணைப்பு செய்ய வேண்டும்.

தெற்கு ரயில்வேயின் பிற நிலையங்களில் உள்ள எஸ்கலேட்டர்கள் மற்றும் லிஃப்ட்களை தணிக்கை செய்து, உடனடி பராமரிப்பிற்கு உத்தரவிட வேண்டும்.

சென்னையின் பயணிகள் சிறந்த சேவையைப் பெற தகுதியுடையவர்கள். தெற்கு ரயில்வே ஆயிரக்கணக்கான தினசரி பயணிகளின் தேவைகளை தொடர்ந்து புறக்கணிக்க முடியாது. இந்த பிரச்சினைகளை நீங்கள் உடனடியாக கவனித்து, தேவையான நடவடிக்கைகள் விரைவில் எடுக்கப்படுவதை உறுதி செய்வீர்கள் என்று நான் நம்புகிறேன்.

இவ்வாறு தயாநிதி மாறன் எம்.பி. கேட்டுக் கொண்டுள்ளார்.



தூத்துக்குடி மாநகரம் 31வது வார்டு பகுதியில் நடைபெற்ற மக்கள் குறை கேட்பு முகாமில் கலந்துகொண்டு பொதுமக்களின் கோரிக்கைகளை சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பெ.கீதாஜீவன் கேட்டறிந்தார். உடன் மாநகர தி.மு.க. செயலாளர் ஆனந்தசேகரன், பகுதிச் செயலாளர் ரவீந்திரன், மாமன்ற உறுப்பினர் கனகராஜ், வட்டச் செயலாளர் பாலு உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.